*2023 ஏப்ரல் 6*]

**116—**

## போக்குவரத்துப் பணிமனை

***11725—திருமதி க. சிவகாமசுந்தரி:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியம், தரகம்பட்டியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

**திரு. தி. வேல்முருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடு) முன்வரிசையில் இருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) துணைக் கேள்வி கேட்பதற்கு யாருக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. வேல்முருகன், சத்தத்தை* raise *செய்யக் கூடாது. (குறுக்கீடு) இதுபோன்று உட்கார்ந்துகொண்டு, இதுபோன்ற வார்த்தைகளையெல்லாம், மிரட்டலெல்லாம் விடக்கூடாது. உட்காருங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. தி. வேல்முருகன், நீங்கள் பேசுவது எதுவுமே அவைக்குறிப்பில் ஏறாது.*

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, தரகம்பட்டியில் புதிய பேருந்து பணிமனை அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை. காரணம், தரகம்பட்டியைச் சுற்றி ஏற்கெனவே பல பணிமனைகள் இருக்கின்றன. கரூர்–I, கரூர்–II, குளித்தலை, அரவக்குறிச்சி, மணப்பாறை, துவரங்குறிச்சி என்று பல்வேறு பணிமனைகளிலிருந்து கிட்டத்தட்ட 24 பேருந்துகள் தரகம்பட்டி வழியாக இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, தரகம்பட்டியில் புதிய பேருந்து பணிமனை அமைப்பதற்கான தேவை எழவில்லை.*

[2023 ஏப்ரல் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள் பேசுவதற்கு முன்னால் நான் ஒரு விஷயத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள் கடந்த 24, 28, 30 மற்றும் 31 ஆகிய 4 தேதிகளில் துணைக் கேள்விகள் கேட்பதற்கு மட்டும் 4 முறை வாய்ப்பு தந்திருக்கிறேன். இது தவிர, முன்வரிசை உறுப்பினர்களுக்கு வரக்கூடிய பல அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களிலெல்லாம் அவரைப் பேச அனுமதித்திருக்கிறேன். "தினமும் எங்களுக்குத்தான் கேள்வி கேட்கவும், துணைக் கேள்வி கேட்கவும் வாய்ப்புத் தர வேண்டுமென்ற" வரம்பு கிடையாது. பல உறுப்பினர்கள், ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோகூட கேள்விகள் கேட்காமல் இருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் அவர்களுக்கு வாய்ப்புத் தரப்படுகிறதே தவிர கட்சி சார்பாகவோ அல்லது வேறு எந்த நோக்கத்துடனோ வாய்ப்புத் தரப்படுவதில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். தேவையில்லாமல் கேள்வி நேரத்தில்— நீங்கள் வாய்ப்பு கேட்கிற இந்தக் கேள்வியில் இன்னும் 20 பேர் துணைக் கேள்வி கேட்க வாய்ப்புக் கேட்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். நான் பேசுவதைக் கேட்டுக்கொள்ளுங்கள். என்னுடைய அறையில் வந்து வாய்ப்பு தரும்படி கோரியவர்கள் 20 பேருக்குமேல் இருக்கிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இதில்* debate *மாதிரி பேசாதீர்கள் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) 4 துணைக் கேள்விகள் கேட்க வாய்ப்புத் தந்திருக்கிறேன். இதற்கு மேலும் வாய்ப்பு கேட்கக் கூடாது. யார், யாருக்கு எப்போது வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று எனக்குத் தெரியும். பாகுபாடு இல்லாமல் எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். பெரியதாக சத்தம்போட்டு இந்த அவையில் பேசக் கூடாது, பார்த்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.*

**திருமதி க. சிவகாமசுந்தரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடவூர் தாலுகா 2010 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டு, தரகம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இங்கே பல்வேறு அரசு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. கரூர் மாவட்டத்தில் செயல்படும்*

*2023 ஏப்ரல் 6*]

*கரூர் மற்றும் குளித்தலை பணிமனைகள் கடவூரிலிருந்து சுமார் 50 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன. ஆகவே, கரூரிலிருந்தும், குளித்தலையிலிருந்தும் நேரடியாகக் கடவூருக்கு நகரப் பேருந்துகளை இயக்க இயலவில்லை. அதனால், இப்பகுதியிலுள்ள மகளிர் கட்டணமில்லா பேருந்து சேவையை முழுமையாகப் பயன்படுத்த இயலவில்லை. கடவூர் தாலுகாவைத் தலைமையிடமாகக் கொண்டு தரகம்பட்டியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்கப்பட்டால், அங்கிருந்து கிராமங்களுக்குப் பேருந்து இயக்க வழிவகை ஏற்படும். ஆகவே, தரகம்பட்டியில் போக்குவரத்துப் பணிமனை அமைத்துத் தர வேண்டுமென்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி சிவகாமசுந்தரி அவர்கள் ஒரு நல்ல வழக்கறிஞர். எனவே, தன்னுடைய தொகுதிப் பிரச்சினைகளை நல்லமுறையில் விவாதமாக எடுத்து வைத்திருக்கின்றார். அவருடைய தொகுதிக்கு பணிமனை வேண்டுமென்று, ஏற்கெனவே 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் மனு அளித்திருப்பதாகவும் சொல்லியிருக்கிறார். ஏற்கெனவே தரகம்பட்டிக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கேட்டு, 'இல்லை' என்று சொல்லியிருக்கின்றோம். கூடுதல் பேருந்து வசதிகள் கேட்டார். இருந்தாலும் மனம் தளராத விக்கிரமாதித்தன்போல, இன்றைக்கும் பணிமனை கேட்டிருக்கின்றார். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் நிதி பெறுவதற்கு முயற்சி எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.*

**திருமதி க. சிவகாமசுந்தரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நிறைவேற்றித்*

*தருவேன் என்று கூறியதற்கு நன்றி கூறுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறையிலிருந்து தரகம்பட்டி வழியாக சென்னைக்கு இயக்கப்பட்டு வந்த பேருந்து, கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. நாளது தேதிவரை பேருந்து இயக்கப்படாமல் உள்ளது. இப்பேருந்தை மீண்டும் இயக்குவதற்கோ அல்லது தரகம்பட்டி, கிருஷ்ணராயபுரம் வழியாக சென்னைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கவோ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் அவையில் கூறியதுபோல, கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட பேருந்துகள் என்பது கொரோனாவால் நிறுத்தப்பட்டது அல்ல, கடந்த ஆட்சிக் காலத்தில் புதிய ஓட்டுநர், நடத்துநர்களை எடுக்காத காரணத்தால் நிறுத்தப்பட்டவை. இப்போது ஓட்டுநர், நடத்துநர்களை புதிதாகப் பணிக்கு எடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள், அரசாணையும் வெளியிடப்பட்டிருக்கிறது. அவர்கள் புதிதாக நியமனம் பெற்றபிறகு, அந்தப் பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம் அவர்கள்.*

**திரு. இராம. கருமாணிக்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், தொண்டி பேரூராட்சியில் போக்குவரத்துப் பணிமனை அமைத்துத் தர வேண்டுமென்பது மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக உள்ளது. அதற்கு இடமெல்லாம் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றது. அந்தப் பணியை விரைந்து செய்து தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

*2023 ஏப்ரல் 6*]

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். தமிழகத்தின் நிதிநிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். எனவே, நிதிநிலைக்கேற்ப, தேவையான நேரத்தில் நல்ல முடிவெடுக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி அவர்கள்.*

**திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள வள்ளலார் நகர் பேருந்து நிலையம் 53–வது வார்டில் அமைந்துள்ளது. இந்தப் பேருந்து நிலையத்தின்* compound*–க்கு அருகாமையில் மெட்ரோ இரயில் நிலையமும் அமைந்துள்ளது. எனவே, அதிகளவில் மக்கள் பயன்படுத்தக்கூடிய ஒரு பேருந்து நிலையமாக அந்தப் பேருந்து நிலையம் உள்ளது. எனவே, அங்கே* parking *வசதி, கழிவுநீர் வசதி, குடிநீர் வசதி மற்றும் பொதுமக்கள் அமர இருக்கைகள் உள்ளிட்ட மற்ற வசதிகளையெல்லாம் செய்து தரவேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி, சென்னை மாநகராட்சிப் பகுதியில் அமைந்திருக்கிறது. எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியுடன் ஆலோசித்து, முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஏற்கெனவே, ஆசிரியர் என்ற பணியை மேற்கொண்டிருக்கிறார். இன்று இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சட்டமன்றத்தை நடத்துவதிலிருந்து நாங்கள் புரிந்துகொண்டது, அவர் கனிவான ஆசிரியராகவும் இருக்கிறார்; கண்டிப்பான ஆசிரியராகவும் இருக்கிறார் என்பதை நாங்கள் இன்றைக்கு அறிகிறோம்.*

[2023 ஏப்ரல் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியென்றால், துணைக்கேள்வி இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள்.

**திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் தொகுதி, சாத்தான்குளத்தில் இருக்கும் போக்குவரத்துப் பணிமனைக்கு சுற்றுச்சுவர் இல்லை. அதேபோல, drivers and conductors ஆகியோரின் தேவைக்கு restroom இல்லை. இதனால், அங்கேயிருந்து பேருந்துகள் இயக்கப்படுவதில்லை. சாத்தான்குளம் என்பது வியாபாரிகள் மிகவும் அதிகமாக இருக்கின்ற இடம், எனவே, இந்த வசதிகள் செய்து தரப்படுமா? அதேபோல, drivers and conductors-க்கான vacancies அதிகமாக இருக்கின்றன. யாராவது ஒருவர் leave எடுத்தாலும் அதற்கான மாற்று drivers இல்லை என்ற செய்தி வந்துகொண்டிருக்கிறது. இது நிவர்த்தி செய்யப்படுமா என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ், அவர்களுடைய கோரிக்கை முக்கியமான கோரிக்கைதான். பணிமனை பாதுகாப்புக்கு சுற்றுச்சுவர் அவசியம். சுற்றுச்சுவர் அமைப்பதற்கு 25 இலட்சம் ரூபாய்தான் தேவைப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பெருந்தன்மையோடு அவர் அந்த நிதியை வழங்க வேண்டும். அதேபோல, பணியாளர்களுடைய ஓய்வறை, கழிவறை இதுபோன்ற வசதிகளை சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும் அவர்களுடைய நிதியிலே செய்து கொடுக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அண்ணன் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்கூட சைதை பணிமனையிலே, இதுபோன்று வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார். நிதிநிலைக்கேற்ப நாங்களும் தெரிவிக்கிறோம், சட்டமன்ற உறுப்பினரும் அன்போடு உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*2023 ஏப்ரல் 6*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.*

**திரு. எம்.சி. சண்முகையா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி அதிகமான கிராமப்புறங்கள் இருக்கின்ற பகுதியாகும். கிராமப்புறங்களிலிருந்து பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும், மருத்துவமனைகளுக்கும் மற்றும் பணிக்கும் செல்வோர்கள் தூத்துக்குடி, திருநெல்வேலி, கோவில்பட்டி ஆகிய பகுதிகளுக்கும் செல்லவேண்டி இருப்பதால், பஸ் போக்குவரத்து வசதி மிகவும் குறைவாக உள்ளது. எல்லா சட்டமன்றத் தொகுதிகளிலும் தலைமையிடத்தில் அரசுப் போக்குவரத்துப் பணிமனைகள் அமைந்துள்ளன. அதனால், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழும் கோரிக்கையாக நான் இதனைக் கொடுத்துள்ளேன். போதுமான அரசு நிலமும் உள்ளது. தொகுதி மக்களின் நலன் கருதி முன்னுரிமை அடிப்படையில், ஒட்டப்பிடாரத்தை மையமாக வைத்து அரசு போக்குவரத்துப் பணிமனை அமைத்துத் தருவார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே 234 தொகுதிகள் இருக்கின்றன. 315 பணிமனைகள் இருக்கின்றன. எனவே, கிட்டத்தட்ட ஒரு தொகுதிக்கு ஒரு பணிமனை என்பதைத் தாண்டித்தான் இருக்கின்றன. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள், அவருடைய தொகுதி தலைமையிடத்திற்கு தேவை என்று கேட்டிருக்கின்றார். நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், எப்படி நமக்கு நாமே திட்டத்தின்கீழ், அவரே ஒரு பணிமனை அமைப்பதற்கான நிதி ஏற்பாடு செய்து தருகிறேன் என்று சொன்னாரோ, அதுபோல் உறுப்பினரும் முயற்சி எடுக்க அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*